


# பாங்குடன் பயில்வோம்

## சிறுவர் பாடல்

கேணிப்பித்தன் ச.அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாங்குடன் பயில்வோம்

## சிறுவர் பாடல்

கேணிப்பித்தன்
ச. அருளானந்தம் B.A,M.Lit,D.A,PhD.SLEAS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பாங்குடன் பயில்வோம் |
| ஆசிரியர் | : | ச.அருளானந்தம் (கேணிப்பித்தன்) |
| வகை | : | சிறுவர்பாடல்கள் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| அட்டைப் படமும் படங்களும் | : | ச.அ.அருள்பாஸ்கரன் M.A (Fine Arts) |
| முதற்பதிப்பு | : | 15 - 07 - 2016 |
| வெளியீடு | : | அருள் வெளியீட்டகம்<br>37 / 7, மத்திய வீதி,<br>உவர்மலை - திருகோணமலை.<br>தொலைபேசி இல: 026-2221507. |
| கிடைக்குமிடம் | : | லங்கா புத்தகசாலை.<br>F.L. 14.1. டயஸ் பிளேஸ்.<br>குணசிங்கபுரம்.<br>கொழும்பு-12.<br>தொ.பே. இல: 011- 2341942 |
| ISBN | : | 978-955-52535-5-0 |
| விலை | : | ரூபாய் 150/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இயற்கையை - எட்டா வானை
எழிற் கருங்கடலை - மற்றும்
வியத் தரும் அணுவை - ஆற்றும்
விந்தையைத் தந்தார் பித்தர்!

புவியினை - மதியை - மீனை
போற்றிடு சிறுவர் பாவால்
தவித்திடு நெஞ்சங் கட்குத்
தந்துள்ளார் - அருளா னந்தர்!

'பாங்குடன் பயில்க' என்றே
படித்ததைப் பாவாய்த் தந்தார்!
ஏங்கினேன், எழுபதாகி
எண்பதை எட்டும் நூல்கள்!

அருளுக்கு இணையார் - பாநூல்
ஆக்கலில் எனவே இ∴தைப்
பொருளுடன் இசையாய்க் கற்றால்
போற்றுவன் சிறுவர் தம்மை

'நத்தம் போல் கேடும், உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது' (235 குறள்)

கவிஞரேறு - கலாபூஷணம் 'தாமரைத்தீவான்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உரை

சிறுவர் பாடல்களை எழுதும்போது 06 – 16 வயதினரைக் கவனத்திற் கொண்டு இப்பாடல்களை எழுதலானேன். சிறுவர் பாடல்கள் எனும்போது முதலாம் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்பினருக்கான நூல்கள்தான் என்று தப்பாக எடைபோட்டு விடுகிறார்கள். உண்மையில் சிறுவர் என்பவர்கள் 18வயது வரையுள்ள ஆண். பெண் இருசாராரையும் குறிக்கும் என ஐ.நா. அமையம் ஏற்றுக் கொண்டுள்ளது. இதனை நமது முன்னோர் கருத்தில் கொண்டு பதினாறு வயதினோரையும் உள்ளடக்கிப் பிள்ளைத் தமிழ் என்ற இலக்கியவகையை ஆக்கித்தந்துள்ளனர். நமது விளையாட்டுப் பாடல்களைப் பாருங்கள். நமது விடலையர் அதாவது இளம்வட்டக் குழுவினர் (**Teen age**) கிட்டியும் புள்ளும் விளையாடுவதைக் கவனியுங்கள். அதில் ஆடுபவர்களைக் கவனியுங்கள். அவர்கள் சிறுவர் என்ற வரையறைக்குள் வந்து விடுகின்றனரா? அச்சிறுவர்கள் விளையாடும்போது கிராமங்களில் உள்ள இளைஞர்களும் பங்கு கொண்டு சிறப்பாக விளையாடுவதைக் கண்டின்புற்றிருக்கிறேன். நானும் விளையாடியிருக்கிறேன்..அதனாலேயே இந்த அறிவியல் சார்ந்த பாடல்களை 18 வயது வரையுள்ள அனைவருக்கும் ஏற்புடையதாக எழுதியுள்ளேன்.

சிறுவர்களுக்கு ஏற்ற பாடல்களை எழுதுவதும், அவர்களைப் படிக்கத் தூண்டுவதும் நமது தலையாய கடமையாகும். நமது சிறார்களின் போக்கைக் கவனியுங்கள். அவர்களது பருவம் மிகமுக்கியமானது. அறிவை வளர்க்க வேண்டியவர்களை அலையவைத்து அல்லலைத் தொலைக்காட்சிகளும். செல்போன்களும். 'இன்ரநெற்' போன்றனவும் தருகின்றன. இன்றைய சினிமாக்காட்சிகளும், நாடகங்களும், விளம்பரங்களும் சிறார்களைத் தம்பக்கம் இழுத்து அவலத்தைக் கொடுக்கின்றன. நல்லனவற்றைக் கொடுக்கும் இவை அல்லனவற்றையே அதிகம் கொடுக்கின்றன.

இவர்களைச் சரியான பாதையில் இட்டுச் செல்லவேண்டியது பெற்றாரினதும், ஆசிரியர்களினதும் தலையாய கடமையாகின்றது. இயற்கையை இரசிக்கவும், அதன் எழிலினைக் கண்டு இன்புறவும் சிறார்களுக்கு வழிகாட்டவேண்டும். இயற்கைதானே நமக்குச் சகலதையும் வழங்கும் களஞ்சியமாகும். இயற்கையைப் பார்க்கவும், அதனைப் போற்றவும் நமது சிறார்களை வழிப்படுத்த வேண்டும். வானத்தில் நிகழும் அற்புதக் காட்சிகளைக் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மெய்மறக்கவும், மொழிவிருத்தியில் இட்டுச் செல்லவும் வழிப்படுத்துவதற்கும் அனைத்துத் தரப்பினரும் உதவ வேண்டும். இந்நூலை வெறுமனே பரிசுக்காக எழுதவில்லை. நமது இளந்தலைமுறையினர் இயற்கையைப் போற்றுபவர்களாக இருக்க வேண்டும். அதன்மூலம் பரந்துபட்ட சிந்தனையை எழுச்சியுறச் செய்யவேண்டும் என்ற ஆதங்கத்தில் எழுதியுள்ளேன். சகல சமய, சமூக நிறுவனங்களும், பெரியவர்களும் இவற்றுக்கு உறுதுணையாக இருந்து நல்வழிப் படுத்தவேண்டும். அவர்களை நல்லனவற்றைப் படிக்கவும், சுயமாகச் சிந்திக்கவும், நல்ல பழக்கவழக்கங்களைப் பின்பற்ற வைப்பதற்குப் பாடுபடவேண்டும்.

சிறுவர் இலக்கியம் பற்றிய சிந்தனையாளர்கள் இவற்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் பரிசுகள் பெறவேண்டும் என்பதற்காக எழுதுவதில்லை. நமது சிறுவர்களைச் சிந்திக்க வைப்பதற்காகவே எழுதுகிறேன். இவ்வகை இலக்கியங்களை பெற்றோரும், ஆசிரியர்களும் நமது சிறார்களுக்கு அறிமுகம் செய்து வாங்கிக் கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டும்.

இளம் வயதில் கற்றுக்கொள்ளும் நற்பழக்க வழக்கங்கங்கள் வாழ்க்கை பூராவும் தொடரும் என்பது கல்வியியலாளர்களது ஏகோபித்த கூற்றாகும். ஆதலால் இச்செயற்பாட்டினை பெற்றோரும், ஆசிரியர்களும் முன்னெடுக்க வேண்டும். நாங்கள் பிள்ளைகளுக்குச் சிறந்த வழிகாட்டல்களைச் செய்யத் தவறினால் அதன் எதிர் மாறான பிரதிபலிப்புக்களைத்தான் காணமுடியும். நல்ல சமூகத்தை உருவாக்கவும், சிந்திக்கவைக்கும் ஆற்றலை மாணவர்களிடம் ஏற்படுத்தவும் வேண்டும். இவ்வாறான பாடல்களை பாடத்திட்டத்தினுள் புகுத்தி மாணவர்களுக்கு இயற்கையின் இரகசியங்களை அறியச்செய்ய வேண்டும். பல்வகையான சிறுவர் பாடல்களைக் கலந்து இந்நூலில் புகுத்தியுள்ளேன். சிறுவருக்கு இவற்றை அறிமுகம் செய்து சிந்திக்க வையுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இந் நூலுக்கு அணிந்துரை தந்துதவிய கவிஞரேறு தாமரைத்தீவான் - அதிபர் திரு. சோ. இரேசேந்திரம் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி.

நன்றியுடன்
கேணிப்பித்தன் ச.அருளானந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலின் உள்ளே ...


1. இயற்கையின் சிலிர்ப்பு
2. எத்தனை அழகு
3. சோல் எனும் சூரியன்
4. சுழன்று ஆடுவோம்
5. நிலவுப் பந்து
6. விந்தையடி
7. நிலவில் ஆடுவோம்
8. ஆவியாக்கம்
9. சுற்றும் பூமி
10. உதிக்கும் சூரியன்
11. ஆச்சி பூச்சி ஆடுவோம்
12. வீசும் காற்று
13. கடல் நீர்
14. அதிசயம் பார்த்தாயா?
15. இயற்கை அரிய புத்தகம்
16. மின்னலின் ஆற்றல்
17. அலைமோதி உடையும்
18. இரவின் இன்பம்
19. வானும் பூமியும்
20. துருவங்கள
21. ஏன் விழுகிறோம்
22. உயிரினம்
23. பிரபஞ்சம் என்பது
24. ஐம்பூதங்கள்
25. மழைநீர்
26. இயற்கையின் கொடை
27. அற்புதம் கோடி வைத்தான்
28. உலக அதிசயம்
29. இயக்கும் பரம்பொருள்
30. எங்கும் நிறைந்த ஏகாந்தப்பொருள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. இயற்கையின் சிலிர்ப்பு

வானைத் தொட்டு வளைத்துப் பிடிக்க
வளர்ந்த மலைகள் நிமிர்ந்ததோ – அதை
கூனல் பிறையும் குனிந்து பார்க்க
கூடித் திரையில் மறையுதோ?

நீல வானை வரைந்து பார்க்க
நீண்டு கடலும் கிடக்குதோ – காற்று
கோலம் போட்டு அழித்துப் பார்க்கக்
கிளம்பி அலைகள் துள்ளுதோ?

வான நெற்றியில் நிலவுப் பொட்டு
வடிவாய் இருப்பதைப் பார்க்கவோ – நீல
வானம் முகத்தைக் கண்ணாடிக் கடலில்
வனப்பைப் பார்த்து மகிழுதோ?

என்ன சிலிர்ப்பு எத்தனை அழகோ
எங்கும் கொட்டிக் கிடக்குதே - இந்த
பின்னற் காட்சிகள் தீட்டிய ஓவியன்
பித்தம் பிடித்த கிறுக்கனோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எத்தனை அழகு

சூரியக் குஞ்சு புறப்படும் நேரம்
சூடும் அழகு கொள்ளையடி - இந்தப்
பாரிய ஓவியக் காட்சியை கவியில்
பாடிட எவரால் கூடுமடி?

மதியம் உச்சியில் சூரியக் குஞ்சின்
மகிமை எரிக்கும் தன்மையடி – உச்சி
மதியம் தாண்ட குளிர்ந்து குளிர்ந்து
மயக்கம் தருமந்திப் பொழுதாமடி.

மாலை வந்தால் மேற்கு வானம்
வண்ணம் சூடும் சிறார்கையில் - சேர்ந்த
கோல நிறங்கள் கொண்ட கலவை
கொட்டிய சித்திரம் தோன்றுமடி

சரிகைப் பட்டுத் துணிகள் தொங்கும்
சாளரம் மேற்கில் கோலமிடும் - அந்த
அரிய காட்சிகள் நமது சிறார்களின்
அழகு முகத்திலும் கோலமிடும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோல் என்னும் சூரியக் குஞ்சு

ஏழு குதிரைகள் பூட்டிய தேரினில்
எழுவான் கரையில் தோன்றி – சுடரை
ஏழேல் உலகமும் இயக்கம் பெற்றிட
இலங்கிடச் செய்யும் சூரியக் குஞ்சு

சோல் என்னும் நமது சூரியக் குஞ்சின்
சூட்டினை நீர்நிலை பெறுமாம் - நீராவி
மேலெழும்: திரண்டு முகிலாய் மாறிட
வான்வெளி காற்று விரட்டித் துரத்தும்

காலையில் சிவந்திடும் கோளம் புறப்படும்
கண்ட உடுக்களும் மறையும் - மதியம்சறுக
கோலம் மேற்கு வண்ணம் புனையும்
களைத்த சோலும் சிவந்து மறையும்

ஒருநாள் முடியும் உழைத்த உயிரினம்
ஒதுங்கி ஒருபுறம் உறங்கும் - படரும்
இருளும் நிலவின் ஒளியும் கலந்து
இங்கிதம் சேர்த்து மகிழும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழன்று ஆடுவோம்

பளிங்கு வானம் பொலிவைக் காட்டும்
புதினம் தன்னைப் பாருங்கடி – அழகு
தெளித்து நிறத்தை தடவிச் சித்திரத்
திரையைத் தொங்க விட்டதாரடி?

நீலத் திரையை பரத்தி விரித்து
நிலவைப் பிடித்த தாரடி? – அதை
சூழ வெள்ளித் தீபங்கள் ஏற்றிச்
சோடித்து வைத்ததும் யாரடியோ?

வெள்ளிக் கூட்டம் ஆடிச் சூழ்ந்து
விரைந்து செல்வ தேனடியோ – அந்த
கள்ளச் செயலில் ஆயிரம் செய்திகள்
காவிச் செல்வதும் ஏனடியோ?

அள்ளி வீசும் அழகு நிலவில்
ஆடி மகிழ்வம் வாருங்கடி – மானாய்
துள்ளி ஒளிந்து நிலவின் ஒளியை
தொட்டிலில் வைப்போம் கூடுங்கடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவுப் பந்து

நிலவுப் பந்து நீல வானை
நிறைத்து அழகைக் கூட்டுதடி – அது
சிலிர்க்கும் ஒளியைப் பரத்திவீசி
சிறுவர் எம்மை மயக்குதடி.

இரவில் மட்டும் நிலவுப் பெண்ணாள்
இருண்ட வானில் தெரிவதுமேன் - அவள்
சுரக்கும் ஒளியைச் சூரியக் குஞ்சும்
சுகித்து இரசித்து மகிழ்வதுமேன்?

பூமிப் பந்தை நிலவுப் பெண்ணும்
பார்த்த படியே சுழல்வதுமேன்? - அந்தச்
சாமி சிவனார் சடையில் சிக்கி
சரிந்து கூனல் ஆனதுமேன்?

நீல வானில் குளிர்ந்த இருளில்
கோலம் போடும் புள்ளிகளே – அந்த
கோலப் பந்தை எங்கள் கைகளில்
கொள்ளும் வழியைக் கூறுங்களேன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விந்தையடி

பூமிப் பந்தின் ஓரத்தைக் கிள்ளி
விண்ணில் எறிந்தது யாரடியோ – அதனை
பூமியைச் சுற்றி வரும்படி செய்த
புதுமைச் சிற்பி எவரடியோ?

விரிந்து பரந்த திரையைவிட்டு
விரைந்து துள்ளி வந்திடுவாய் – நிலவே
விரும்பி உன்னை அணைத்துத் தழுவி
விரலால் அளைய வந்திடுவாய்

இரவு வந்தால் நிலவுப் பந்தாய்
இருளைப் போக்க ஒளிபாய்ச்சி – எம்மை
சுருண்டு விடாது சுறுசுறுப்பாக்கி
சுகத்தை அளிப்பது விந்தையடி

கூனற் பிறையாய் தோன்றும் நிலவு
கொஞ்சம் கொஞ்சமாய் வளர்வதுமேன்? - அது
ஞானம் பெற்ற ஞானியாய் ஒருநாள்
வானில் வருவதும் விந்தையாமன்றோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவில் ஆடுவோம்

வண்ண நிலவின் தண்மை ஒளியில்
வளைந்து சுழன்று ஆடிடுவோம் - அந்த
விண்ணில் நீந்தும் அழகு நிலவினை
அருகில் அழைத்துப் பாடிடுவோம்

கண்ணைக் கவரும் கடற்கரையோரம்
கோலம் வரையும் ஓவியனாய் - வண்ண
நண்டுக் கூட்டம் நிலவில் கூடி
நிகழ்த்தும் நாடகம் கொள்ளையடி

அலைவந்து மோத கரையெங்கும் ஒதுங்கும்
அடையல் படர்வதைப் பாருங்கடி – நமது
கலைபயில் சிறுவர் கிறுக்கலாய் நெளியுது
கலைத்துவம் எப்படித் தோணுதடி?

அடையலின் மேலே மணல்வந்து மூடும்
அதுவே வண்டலாய் மாறுமடி - பின்
படை படையாகி படிந்து பயிர்க்கு
பசளையாய் உதவும் விந்தையடி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆவியாக்கம்

நீர்நிலை மேலே கதிர்வந்து மோதும்
நீராவி விடுபட்டு ஓடும் - அது
ஒருநிலை சேர்ந்து கருநிறம் பெற்று
கார் முகிலாகி வானில் ஆடும்

சிதறி அலைந்து திரியும் மேகம்
சேர்த்துமே ஒன்றாய் கூடும் – காற்று
பதறிப் பின்னால் துரத்திச் செல்லும்
பதமாய் ஒன்றாகச் சேர்க்கும்

கூட்டிய மேகம் காற்றினில் மோதி
கருக்கொண்டு சேரந்து பிணையும் - அதில்
மாட்டிய அணுக்களின் மின்னலை யோடி
முழங்கியே இடிமழை பொழியும்

பொழியும் மழையதன் இழையிடை புகுந்து
பார்க்கும் சூரிய கதிர்களடி – ஒளிந்த
மழைத் துளிதடவ வெளிப்படும் நிறங்கள்
மறுபுறம் வானவில்லாய் தோன்றுமடி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சுற்றும் பூமி

தன்னைத் தானே சுற்றும் பூமியில்
தவழும் சூரியஒளி வந்து பரவும் - வெயில்
பின்னால் சறுகும் வேளையில் இருளும்
படர்ந்து துரத்த இரவாகும்

பருவ காலங்கள் வருவது எதனால்
படித்து அறிந்து சொல்வீரா? – பூமி
பகலவன் தன்னைச் சுற்றி வருவதால்
பருவ காலங்கள் தோன்றுமடி

ஆதியில் பூமியில் கோளொன்று மோத
அச்சு கோணலாய் சரிந்ததுவாம் - அந்த
மோதலால் சரிந்த பூமியில் இராப்பகல்
சமமாய் இல்லையாம் கேளுங்கடி

பூமிப் பந்து நீள்வட்டப் பாதையில்
பயணம் செய்வதைப் பாருங்கடி – அந்தச்
சாமி செயலாதா? நாமெதைச் சொல்வோம்
சிந்தனை செய்து வாழுங்கடி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிக்கும் சூரியன்

சூரியன் கிழக்கே உதிக்கும் வேளை
சோடிக்கக் கிழம்பும் மேகம்பார் - வண்ணம்
சூடிச் சிரிக்கும் சரிகைத் தோரணம்
சூடும் அழகின் பாங்கினைப் பார்.

முகிலைக் கிழித்து முழுசிப் பார்க்கும்
முழுமதி போன்ற சூரியனார் - இந்த
அகிலம் விழிக்க கதிர்களைப் பரப்பி
அனலைக் கிளப்பி வெளிவருவார்.

சிவந்த கோளமாய்க் கிளம்பிய சூரியன்
செந்நிறம் எங்கே போனதடி – வானின்
பவனி வந்து உச்சியில் வெயிலை
பரப்ப புவிவெப்பம் கொள்ளுமடி.

நீரியல் வட்டம் நமதரும் பூமியில்
நிகழ்வது புதுமை தானடியோ – அந்த
சூரியக் குஞ்சின் செயலால் உயிரினம்
சூழுயிர் பெற்று வாழுதடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சி பூச்சி ஆடுவோம்

நிலவின் ஒளியில் கைகளை விரிப்போம்
நின்று சுழன்று சுற்றிடுவோம் - பக்கம்
சுழலச் சுழல சுற்றும் உலகம்
தோன்றும் நம்முன் புதுமையடி.

முதலில் நாம்தாம் சுற்றிச் சுழல்வோம்
முன்னா லுள்ளவை தெரியும் - மரஞ்செடி
அதனதன் இடத்தில் அசையாதிருக்கும்
அப்புறம் நடப்பதைப் பாருங்கடி.

விரைந்து சுழல மரஞ்செடி பொருட்கள்
வந்து சேர்ந்துமுன் சுழலும் - நமதுடல்
செருக்கை இழக்கும் கால்கள் பின்னும்
சரியாய் உலகம் சுழல்வதுபுரியும்

எழுந்து நிமிர்ந்து நின்றால் வீழ்வோம்
நிழலாய் சூழல் சுற்றுமடி – இந்த
சுழலும் உலகில் வாழ்கிறோம் நாமேன்
சுற்றுவ தில்லை கேளடியோ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வீசும் காற்று

கண்ணைத் திறந்தால் காட்சிகள் யாவும்
கட்புலனாகி மூளையில் பதியும் - கால்வாயில்
தண்ணீர் பாயும் இசையொலி காதில்
தாண்டவ மாடும் மனந்துள்ளும்

மலரும் பூக்கள் தேனினைச் சிந்தும்
மணத்தைப் பரப்பும் மனமீர்த்து – உள்ளம்
அலரும் பரவசம் உடலெங்கும் பரவும்
ஆனந்த நடனம் தான் பொங்கும்

தேனை நாவில் தடவ இனிக்கும்
தமிழிசை நாவில் தவழும் - அது
வான்வரை பரந்து திசையெங்கும் மோதும்
வாழ்வினை சுகமதாய் மாற்றும்

கண்ணால் பார்க்க முடியாப் பொருட்களை
காற்று நமக்கு உணர்த்தும் - அந்த
உண்மையை உணர்த்த வந்ததே காற்று
உண்மையில் சூழலே காட்டும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் நீர்

கடல்நீர் உப்பாய் கைப்பதும் ஏனடி
கிணற்று நீரேன் கைப்பதில்லை - நீ
கடலின் ஓரத்தில் மடுவொன்றை கிண்டு
காண்பாயதில் நீர்சுரந்து பொங்கும்

மடுவினில் இருக்கும் நீர்தனை ஏந்தி
வாயினில் இட்டுப் பாரடியோ – அந்த
மடுநீர் நாவில் கைக்குதா சொல்லு.
மந்திரம் இதுதான் புதுமையடி

கிணற்று நீரேன் கைப்பதுமில்லை
குளத்து நீரும் கைப்பதில்லையே - இதைநீ
மனதில் என்றும் நினைத்த துண்டா
மாயமாம் உலகதின் செயலாமடி..

விந்தை உலகிது வேடிக்கை மனிதர்கள்
வலம் வரும் நிலமது கேளடியோ – சுழலும்
இந்த உலகினில் இயற்கையை இனிது
இதனைப் புரிந்துகொள் போதுமடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அதிசயம் பார்த்தாயா?

கிழக்கிலே சூரியன் உலாவரும் வேளை
கிளம்பிடும் மேகத்தைப் பார்த்தாயா? - திடீரென
மழையாய் பொழிய தோன்றும் வில்லும்
மேற்கில் வளைவதேன் சொல்வாயா?

சூரிய ஒளியிலே நிறங்கள் ஏழென
சொல்வாயா அவைகளின் பெயர்களையே –விப்ஜியோ
பாரிய சொல்லதின் பொருள் அறிந்தேநீ
படினம் மனதில் பதிப்பாயா?

சூரிய ஒளியின் சக்தியைப் பிழிந்தே
செயற்படும் செய்திகள் கேட்டாயா? – மரஞ்செடி
பாரிய ஒளித்தொகுப்புப் புரியுதேயதன்
பாங்கினை எண்ணிப் பார்த்தாயா?

குருத்தோலை விரிந்து காவோலையாகும்
கருத்தினை நீயும் உணர்ந்தாயா? - இயற்கை
தருமந்த அறிவை நீயுணர்வாயா? அதை
தரணி யறியச் செய்வாயா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அரிய புத்தகம்

இயற்கை என்னும் புத்தகஞ் சூழ்ந்து
இருப்பதை யாரும் உணர்ந்தோமா? — அதில்
பயில ஆயிரம் பாடங்கள் உண்டுநாம்
படித்து ஞானிகள் ஆவோமா?

சூரியன் உதிக்கும் வேளையில் கடலலை
துள்ளிக் கரைதனில் மோதும் - தாமரை
பூரித்து மலர்ந்து புதுமணம் பரப்புமதைப்
பூந்தென்றல் அள்ளியே செல்லும்.

வரிவண்டு ஊதும் மதுரசந் தேடும்
மலரும் மகரந்தம் தடவும் - வண்டும்
இரைந்து எழுந்து மறுமலர் நாடும்
இயற்கையின் சிலிர்ப்புத் தோன்றும்

மகரந்தச் சேர்க்கை மரஞ்செடி சேரும்
மலரும் காய்கனி ஆகும் - முற்றி
சுகந்தரு உணவாய் உயிரினம்வாழ
சுவையொடு மனிதருக்கும் உதவும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னலின் ஆற்றல்

மேகந்தி ரண்டெழும் முட்டியே மோதிடும்
மின் அலைக் கொடியது பரவும் - வானம்
தாகம் தீர்த்திடும் தாண்டவம் புனைந்திடும்
தாக்கம் பெற்றிட சக்தி பிறந்திடும்.

சக்தி பிறந்துமே சாடி இடித்திடும்
சாடும் முழக்கம் அதிர்ந்து பரவிட – யுகம்
திக்கெங்கும் இரைந்து தீயெனப் பரந்து
தகதிமி தகதிமி தகதிமியெனச் சிரிக்கும்

மோதும் அணுத்திரள் கலந்து பிணைந்திடும்
மோனத் தவமது கலையும் - இறையின்
மாதவம் தோன்றிடும் மாயையும் புரிந்திடும்
மாற்றத்தின் பொருளது புரியும்

இறங்கிய மின்னலில் கலந்திடும் நைதரசன்
எமது மண்ணிலே படியும் - அது
மரஞ்செடி கொடிகளின் சத்துணவாகியே
வளர்ந்திட உதவியும் செய்யும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைமோதி உடையும்

மல்லாக்கப் படுத்து வானினைப் பார்த்தால்
வண்ணங்கள் வந்தாடிச் செல்லும் - மேகம்
எல்லாமே கூடி கலந்தாடிப் பிரியும்
எண்ணங்கள் அலைமோதி உடையும்.

பரந்த வான்வெளிப் பரப்பினில் பகலவன்
பவனியால் வெயில் கண்பறிக்கும் - இரவினில்
பரவிடும் நிலவொளி குளிரினைத் தடவிட
பண்ணொடு பாட்டுமே கூத்திடும்.

கூத்திடும் பாட்டு குரல்வழி இசையொடு
காற்றினில் கலந்து பரவிடும் - கேட்ட
மாத்திரம் மரஞ்செடி ஆடியசைந்திடும்
மாநிலம் மயக்கத்தில் ஆழ்ந்திடும்

நிலவொளி இலைகளில் பட்டுத் தெறித்திடும்
நிசப்தமாய் மலரும் பூக்கள் - ஆயிரம்
மலர்களின் வாசம் சுரந்திடும் தேறலை
மாந்திட வண்டினம் குவிந்திடும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இரவின் இன்பம்

பகல் எலாம் உழைத்த சூரியக் குஞ்சு
பதுங்கி மேற்கினில் மறையும் - அதனைச்
சுகமெனத் தென்றல் கடலலை தழுவி
சரிகம பதநி எனஇசை வீசும்

குவிந்திடும் வண்டினம் கூவி அரட்டிடும்
கும்மாளம் கொட்டியே பாடும் - இனிமை
கவிந்திடும் பூமியில் காவிடும் காற்றதை
களிகொண்டு மரஞ்செடி ஆடும்.

பகலவன் உதவியில் பகலெலாம் உழைத்தவர்
பால்வெளி நிலவினில் இருந்து – தம்
அகமெலாம் மலர அனுபவப் பகிர்வினை
அள்ளியே தெளித்து மகிழ்வர்.

நிலாச்சோறு உறவுகள் சேர்ந்து விருந்தினை
நித்தம் உண்டு மகிழ்வர் - இந்த
கலாநிகழ் வெந்தப் பிறவியில் தொடரும்?
களிகொள் பிறவி இங்கென மகிழ்வர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானும் பூமியும்

பூமியில் இருந்து அண்ணார்ந்து பார்க்க
பரந்து வான்வெளி தெரியும் - அங்கு
பூமி சுற்றுதாம் சூரியன் சுகந்தரும்
பகல் இரவு புதுமைகள் விரியும்

வான்வெளி எங்கும் வெண்மேகம் திரளும்
வானின் பொருட்களும் மறையும் -கதிரவன்
தான்கொண்ட சுடர்தனை விசிறிட இயக்கம்
சடப்பொருள் யாவுமே பற்றும்

பால்வெளி உண்மை பறக்கும் கோள்கள்
பகலவன் தனைச்சுற்றிச் சுழலும் - அந்தப்
பால்வெளி தானடா திருப்பாற் கடலென நம்
பெரியோர் தெளிந்திட்ட உண்மை

வானும் பூமியும் நமதருஞ் சொத்தாம்
வாழும்வரை அதைப் போற்று – அந்த
வானும் பூமியும் தூய்மையாய் இருந்தால்
வாழ்நாள் சொர்க்கமாய் மாறும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# துருவங்கள்


புவியின் முனைவுகள் துருவங்களாகும்
புரியுமா அங்குள்ள நிலைமை - பனி
குவிந்து படிந்து பாறையாய் நகரும்
குளிரெங்கும் கலந்து உறையும்

பூமிப் பந்தின் முனைவுகள் ஏனோ
பனியினால் மூடியே கிடக்கு – என்றும்
நாமதன் சூக்குமம் அறியாது கிடக்கிறோம்
யாரதைத் தெளிய வைப்பார்?

பகல் ஆறுமாதம் இரவாறு மாதம்
பாரினில் உண்டென்று சொல்வார் - அதை
புகட்டிடக் கதைகளைப் புனைந்து கூறினர்
புதுமைகள் தெளிந்ததா உனக்கு

இராவணன்தம்பி கும்ப கர்ணனாம்
இரவாறு மாதம் உறங்குவராம் - அவரை
இராமர் சமரில் இறக்க இராவணன்
எடுத்த முயற்சிகள் ஆயிரமாம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஏன் விழுகிறோம்

பாலை வனங்களும் பயிர்விளை நிலங்களும்
பாரினில் உண்டதைப் புரிவாய் - காற்று
சூல்கொண்டு வீச மழைத்துளி சொரியும்
சூழலும் மாற்றத்தைக் காணும்.

உயர்மலைத் தொகுதியும் ஆழ்கடல் பகுதியும்
உள்ளது பூமியில் உணர்வாய் - அவற்றில்
உயிருள்ள பொருளும் உயிரற்ற பொருட்களும்
உண்டென உணர்ந்து கொள்வாய்.

நீரடி மடியில் நீந்திடும் உயிர்கள்
நிலத்திலே வாழுமா சொல்லு? – உன்
கூர்மதி கொண்டு பதிலினைத் தேடு
குறைவிலா அறிவு கூடும்

பூமியின் சுழற்சி வேகம் அதிகமாம்
பூமியில் விழாது நடக்கிறோம் - எப்படி
நாமிங்கு நம்மை சுற்றிச் சுழன்றால்
நிலைகுலைந்தேன் விழுகிறோம்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உயிரினம்

தாவர வகையினை உற்று நோக்கினால்
சிந்தனை துளிர்த்து விரியுமடா - அங்கு
தூவிடும் அறிவு துளிர்விட்டுச் சுடரும்
துளாவியே மூளையில் பதியும்.

வேர்வகை நிலத்தடி இருந்து பலமிடும்
வேண்டிய கனிமத்தை உறிஞ்சும் - அந்நீர்
ஊர்ந்து கலவழி யூடே சென்றிடும்
ஒளித் தொகுப்பினை இலைகள் தொடரும்

இலைகளில் பச்சையம் பசுமையாய் தெரியும்
பகலவன் ஒளியினை பாய்ச்சும் - சக்தியால்
மாப்பொருள் திரளும் கலவழி பரந்திடும்
மரங்களும் தளிர் கிளைவிட்டு வாழும்

இயற்கையின் நியதி பிரபஞ்சம் எங்கும்
வியாபித் திருப்பதை உணர்வாய் - அந்த
இயக்கச் சக்திதான் இறைவன் என்பதை
எண்ணியே உள்ளத்தில் கொள்வாய்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பிரஞ்சம் என்பது...

நிலம், தீ, நீர், வளி, ஆகாயம் என
ஐந்தும் கலந்த மயக்க உலகம் - என்றே
உலகம் உவக்கும் தொல்காப்பியன் கூறி
உள்ளான் உணர்ந்து கொள்வோம்

உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே
உனக்கது புரியுமா தம்பி - இதை
உணர்ந்தவர் அவரே கற்றோர் ஆவார்
உண்மையும் அதுதான் தம்பி

புத்தகம் படிப்போர் அனைவரும் அறிஞர்
புரட்சியர் கற்றவர் ஆகார் தம்பி – கற்றவை
கற்றபின் அதன்படி நடப்பவர் எவரோ
நற்தவர் நிறைந்த உயர்ந்தோர் ஆவார்.

இயற்கையின் சிலிர்ப்பு இரையும் துள்ளும்
எமனையும் முன்னே நிறுத்தும் - புரியாதவரை
இயற்கையே சுழன்று சுனாமியாய் அடிக்கும்
இதுதான் என்றென்றும் நடக்கும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஐம்பூதங்கள்

ஐம்பூ தங்களின் கலவையே நாங்கள்
அதனைப் புரிந்திட வேண்டும் - புரிந்தால்
ஐம்புலன் செயற்படும் அனைத்தையும் புரிவாய்
உயிர்களும் உன்னை வணங்கும்.

சித்தரும் பின்வந்த சிவனடியாரும் பின்னர்
புத்தரும் ஜேசு நபிகளுமேதான் - மனிதர்
சித்தந் தெளிய மருந்தினைச் சொன்னார்
சிறிதும் மனிதர் தெளியவே இல்லை

அணுவைக் கண்ணால் காண்பதரிது
அதனுள் அணுக் கருவுண்டாம் - கருவில்
எலத்திரோன் நியூற்றோன் புரொட்டோன் உண்டு
அதுவே சக்தியின் பிறப்பிடமாம்

ஐம்பூ தங்களின் கலவை கலைந்திட
அனைத்தும் மண்ணுள் புதையும் - அந்த
ஐம்பூ தங்களும் கலைந்து மாறிடும்
அறியா மாந்தரின் ஆட்டமும் ஒடுங்கும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைநீர்

பகலவன் செயலால் பாறைகள் விரியும்
பலநாள் இச்செயல் தொடரும் - இரவில்
பகலவன் மறைவால் பாறைகள் சுருங்கும்
பாறையில் வெடிப்புக்கள் தோன்றும்

நெடுநாள் தொடரும் வெடிப்பு மெலிதாய்
தகர்ந்து கழன்று சொரியும் - வளி நீரும்
நுடைத்து எடுத்து சேர்க்கும் ஒருபுறம்
படியச்செய்து அடைய லுருவாகும்

மழைநீர் ஆறாய் பெருக்கெடுத் தோடும்
வழியில் தடைபல உருவாகும் - அதன்மேல்
கழிமணல் தடைமேடுகள் உருவாகும்
கிளைபலவாகி ஆறு பிரிந்தோடும்

கழிமுகம் தோன்றும் வண்டல் உருளும்
கரையிடித்து மழைநீர் கடலுள் புகும் - மீதிநீர்
தழிவழியூடே நிலத்துள் புகுந்து தரைநீராகும்
தடிநீராகி வேண்டியபோது மக்களுக்குதவும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இயற்கையின் கொடை

ஒன்பது கோள்களில் ஒன்றாய் இறைவன்
உயிர்வாழ் உலகினை படைத்தான் - அதில்
தென்படும் உயிர்களில் மனிதனை மட்டும்
சிந்தனை செய்வகையினில் வகுத்தான்.

மரங்களின் கீழும் குகைகளின் உள்ளும்
வருந்தி வாழ்ந்த குரங்கர் - மூளை
விரைந்து இயற்கையைப் பார்த்து இரசித்தது
வில்லாய் வளைந்த கூனும் நிமிர்ந்தது

கல்லொடு கல்லை உரைசித் தீயினை
கண்டு மகிழ்ச்சியும் கொண்டான் - தீயின்
வல்லமை உணர்ந்து ஆயுதம் செய்தான்
வாழ்வினில் உயர்ச்சியைக் கண்டான்.

அணுவினைப் பிளந்து அதனுள இருக்கும்
எலக்ரோன், நியுற்றோன புறொட்டோன் - அடங்கிய
அணுவின் ஆற்றல் அனைத்தையும் கற்றான்
அறிவின் அற்புத சக்தியைப் புரிந்தான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதம் கோடி வைத்தான்

மழைதனைப் பெய்து நதியென ஓட
வழியினைச் செய்தவன் யாரடியோ – நதி
மண்மீது புரண்டு தரையினைக் கரைத்து
மபதநி இசையொடு பாய்வதும் ஏனடியோ?

மரஞ்செடி செழித்துக் காய்கனி தந்து
மலர்களைச் சொரிவது அற்புதமே – அவை
மனதினில் கிளர்ச்சியை கற்பனை வளத்தினைப்
மெருகேறச் செய்வதும் இன்பமடி

காவெங்கும் பறவை குயிலினம் பாட
கான்மயில் ஆடிடும் காட்சியைப் பார் - மான்மரை
கானகமெங்கும் விலங்கினம் மகிழ்ந்து
களிப்பதை எண்ணி வியப்பாயடி

உயிரின வகையினைப் படைத்த இறைவன்
ஒவ்வோ ரினமும் பெருகும் வழிக்கு - தனிவிதி
செயன்முறை ஊக்கமும் கவர்ச்சியும் வைத்து
செய்பவனை நாமும் தொழுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உலக அதிசயம்

ஐம்பெரும் பூதமும் அற்புதச் செயல்களும்
அவனுக்கு மட்டுந்தான் வெளிச்சம் - நாம்
நம்சிறு மூளையால் தேடியறியும் ஆற்றலை
நமக்குத் தந்தவன் பசியை ஏன் கொடுத்தான்?

பூமி சரிந்த நிலையில் சுழல்வதை நீ அறிவாயா?
பூகம்பம் தோன்றி அழிவுகள் தொடரும் - இதனை
சாமி வந்தேன் தடைசெய்யவில்லை இவை
யாரின் செயலென்று நினைக்கின்றாய் தம்பி?

இரவு பகலொடு காலமாற்றங்கள் தோன்றுதல்
இறைவன் செயலென்ப தறிவாயா? - பகலும்
இரவும் போலே இன்பதுன்பமும் வருமாம்
இதனைப் புரிந்தவர் வாழ்வு பூரணமாகும் தம்பி.

பசியை நமக்கு மட்டுமா வைத்தான் உலகில்
பல்லு யிரினம் யாவுக்கும் வைத்தான் - இதனை
உசிதம் என்பதன் பொருளைப் புரிந்தவர்
உன்னத ஞானிகள் ஆவார் புரிவாய் தம்பி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இயக்கும் பரம்பொருள்


வானில் நிகழும் புதுமைகள் எத்தனை ஆயிரம்
வியப்பிலையா தம்பி உனக்கு? – பகலில்
கூனல் பிறையுடன் கூட்டமாய் திரியும்
கோடி நட்சத்திரம் தெரியுமா தம்பி.?

கூனல் பிறையும் வளர்ந்து வளர்ந்து
கூடி முழுமதியாய் தோன்றும் - தண்ணொளி
வான வெளியினில் பரவி உலகினை
வண்ண மயமாக்கும், மகிழும் உயிரினம்

பகலவன் திங்கள் பூமகள் நேராய்
பார்வையில் இருந்தால் தோன்றும் - அற்புதம்
பகலவன் ஒளிக்கதிர் சந்திரனில் விழவது
புவியை மறைக்குமது சூரிய கிரகணமாகும்

சூரியன் கதிர்கள் புவியில் விழும் அப்போது
சுடருறும் சந்திரன் மறையும் - அதனால்
பாரிய சந்திர கிரகணம் உருவாகும் நன்றாய்
படருதா அறிவு மூளையில் பதிந்ததா தம்பி?







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கும் நிறைந்த ஏகாந்தப் பொருள்



பிரபஞ்சம் முதலாம் அனைத்தையும் படைத்து
பஞ்ச பூதங்கள் செயல்களை வைத்து – அவற்றை
திரவம் திண்மம் வாயு எனப் பிரிவாயொடுக்கி
தாண்டவம் புரியும் சக்தி எதுவென உணர்வாயா?

தன்னிகர் இல்லாத் தலைவன் ஒருவன் தகைசார்
எண் குணத்தான் என்பதனை உணர்வாய் - அவன்
உன்னிலும் என்னிலும் உயிரினம் சடம்யாவிலும்
உள்நின்று உறைவான் இதை உணர்ந்தவன் ஞானி.

தூணிலும் துரும்பிலும் விசும்பிலும் யாவிலும்
தானே கலந்து தன்னேரில்லாப் பொருளாய் –நிற்பவன்
ஆணாய் பெண்ணாய் அலியாய் அருவுருவாய்
அன்பின் இருப்பாய் அவரவர் உளத்தில் உள்ளான்

அவனி யெங்கிலும் ஊனுயிராகி உட்பொருளாகி
அணுவாய் கருவாய் அனைத்தையும் - இயக்கும்
சிவனாய், ஈஸ்வர அல்லா கர்த்தர் எனஅவரவர்
சிந்தையிலுள்ள மொழியில் பரம்பொருளே இறைவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிற சிறுவர் நூல்கள்

| இல | நூலின் பெயர் | நூலின் வகை |
|---|---|---|
| 01 | இன்பக் கனிகள் | சிறுவர் பாடல் |
| 02 | பாட்டுப் பாடுவோம் | சிறுவர் பாடல் |
| 03 | காகமும் தம்பியும் | சிறுவர் பாடல் * |
| 04 | பாடி ஆடுவோம் | சிறுவர் பாடல் |
| 05 | கடலும் காவிரியும் | சிறுவர் பாடல் |
| 06 | சின்னச் சின்னப் பாட்டு | சிறுவர் பாடல் |
| 07 | மனதுக்கினிய பாட்டு | சிறுவர் பாடல் * * |
| 08 | ஆனந்தமான பாட்டு | சிறுவர் பாடல் |
| 09 | சகோதரராய் வாழ்வோம் | சிறுவர் பாடல் |
| 10 | இசையோடு அசைவோம் | சிறுவர் பாடல் * |
| 11 | தம்பிக்கொரு பாட்டு | சிறுவர் பாடல் |
| 12 | அறிவைத் தரும் பாடல்கள் | சிறுவர் பாடல் * * |
| 13 | இனிக்கும் பாடல்கள் | சிறுவர் பாடல் |
| 14 | அறிவொளிப் பாடல்கள் | சிறுவர் பாடல் |
| 15 | தங்கைக்கொரு பாட்டு | சிறுவர் பாடல் |
| 16 | ஆடிப்பாடும் பாடல் | சிறுவர் பாடல் * |
| 17 | பாங்குடன் பயில்வோம் | சிறுவர் பாடல் |
| 18 | ஆடி மகிழ்வோம் | சிறுவர் ஆடலும் பாடலும் |
| 19 | பூமித்தாய் | சிறுவர் பாடல் |
| | **சிறுவர் கதைகள்** | |
| 01 | பூஞ்சிட்டுக்கள் | சிறுவர் கதைகள் |
| 02 | சின்னத் தேவதைகள் | சிறுவர் கதைகள் * |
| 03 | கண்ணனும் இராமனும் | சிறுவர் கதைகள் * |
| 04 | தங்க மாம்பழம் | சிறுவர் கதைகள் |
| 05 | சிறகு வைத்த கதைகள் | சிறுவர் கதைகள் |
| 06 | சாதனையாளர் | சிறுவர் கதைகள் * |
| 07 | அற்புதமான வானம் | சிறுவர் அறிவியல் கதைகள் |
| | | |
| 08 | பார்த்தேன் கதைகள் | சிறுவர் கதைகள் |
| 09 | மலைத்தேன் கதைகள் | சிறுவர் கதைகள் |
| 10 | சுவையான கதைகள் | சிறுவர் கதைகள் |
| 11 | சின்னச் சின்ன சிறுவர் கதைகள் | சிறுவர் கதைகள் * |
| 12 | சந்திரன் கதைகள் | சிறுவர் கதைகள் * |
| 13 | நிலாவில் நிலாமதி | சிறுவர் கதைகள் |
| 14 | சிந்தனைக் கதைகள் | சிறுவர் கதைகள் |
| | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | நூலின் பெயர் | நூலின் வகை |
|---|---|---|
| 01 | வித்தகன் விபுலானந்தன் | சிறுவர் இலக்கியம் சரிதை |
| 02 | கரம்பொன் தனிநாயகம் | சிறுவர் பாடல் |
| | | * |
| | **சிறுவர் கட்டுரை நூல்கள்** | |
| 01 | பேனாவினால் பேசுவோம் - 1 | சிறுவர் கட்டுரைகள் |
| 02 | பேனாவினால் பேசுவோம் - 11 | சிறுவர் கட்டுரைகள் |
| 03 | எழுதுவோம் வாசிப்போம் | சிறுவர் கட்டுரைகள் |
| 04 | மலரும் மொட்டுக்கள் 3 - 6 | சிறுவர் கட்டுரைகள் |
| 05 | மனங்கவரும் மொட்டுக்கள் | சிறுவர் கட்டுரைகள் |
| 06 | அவிழும் மொட்டுக்கள் | சிறுவர் கட்டுரைகள் |
| 07 | தமிழ்த்தேன் துளிகள் | சிறுவர் கட்டுரைகள் |
| | | |
| | **சிறுவர் நாவல்** | |
| 01 | பளிங்குத் தீவு | சிறுவர் நாவல் |
| 02 | பயங்கொள்ளலாகாது பாப்பா | சிறுவர் நாவல் * |
| 03 | காட்டில் கலவரம் | சிறுவர் நாவல் |
| 04 | உல்லாசப் பயணம் | சிறுவர் நாவல் |
| 05 | மனதில் உறுதி வேண்டும் | சிறுவர் நாவல் * |
| 06 | அந்த மாணவர் உலகம் | சிறுவர் நாவல் |
| 07 | துணிச்சல் மிக்க சுந்தரி | சிறுவர் நாவல் |
| 08 | சுனாமி தந்த உறவு | சிறுவர் நாவல் |
| | | |
| | **English** | |
| 01 | **Butterflies and Children** | **Children Story** |
| 02 | **The Man and The Fish** | **Children Story** |
| 03 | **The Tree and The Parrot** | **Children Story** |
| 04 | **The Elephants and Ants** | **Children Story** |
| 05 | **The Little Spider** | **Children Story** |
| 06 | **The Crow and The Cuckoo** | **Children Story** |
| 07 | **Essays for Little Children** | **Children Story** |
| 08 | **Essays for Kids** | **Children Story** |
| 09 | **Let's Read and Write Essays** | **Children Story** |
| 10 | **A New Dawn of Essays** | **Children Story** |
| | | |
| | | |
| | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலாசிரியர்.....



கேணிப்பித்தன் ச.அருளானந்தம் அவர்கள் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஆலங்கேணி என்ற கிராமத்தில் பிறுந்து, கிராமச்சூழலில் வாழ்ந்தவர். ஆசிரியராக, அதிபராக, இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து கல்விப் பணிப்பாளராக, வடக்கு கிழக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். ஈழத்தில், சிறப்பாகத் திருக்கோணமலை மாவட்டத்தில் சிறுவர் இலக்கியம் படைப்பதில் முக்கிய பங்கினை வகிப்பவர். ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கும், முன் பள்ளி ஆசிரியர்களுக்கும் கல்விப் புலத்தில் வழிகாட்டியாகத் திகழ்பவர். சிறந்த கல்விமான். சிறுவர் இலக்கியப் படைப்பில் இதுவரை சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள், கட்டுரைகள், சிறுவர் நாவல்கள் என எழுதி வெளியிட்டுப் பல பரிசுகளையும். பாராட்டுக்களையும் பெற்றவர்.

இந்நூலில் 30 அரிய விடயங்ளை சந்தங்கூட்டிப் பாடக் கூடியதாகத் தந்துள்ளார். 3 தொடக்கம் 5ம் வகுப்பு மாணவர் களுக்குப் பொருத்தமான சிந்தனைக் கிளறல்களை அருமையாகத் தந்துள்ளார். இவரது நூல்களை வாங்கிப் படித்து உங்கள் பிள்ளைகளின் அறிவினை விருத்தி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். நன்றி



ஓ.குலேந்திரன்
பொருளாளர்
திருகோணமலை தமிழ்ச் சங்கம்
திருகோணமலை

ISBN : 978-955-52535-5-0
Price : Rs. 150/-

Printed by :
NISAAN PRINTERS (PVT) LTD. No. 64N, Peer Saibo Street, Colombo-12. TEL : 2439401, 4997221

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org